செ.வெ.எண்: 29 நாள்: 14.07.2016

# பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.01.2016 அன்று தொடங்கி வைக்கப்பட்ட வணிகவரித்துறையின் e-C TAX எனப்படும் ஒருமுகப்படுத்தப்பட்ட கணினிவழி தீர்வுதிட்டம் (Total Solution Project) தற்பொழுது அனைத்து மாவட்டங்களிலும் வெற்றிகரமாகசெயல்பட்டுவருகின்றது.

அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்ட வணிகர்களின் தேவைகளை மையப்படுத்தியும் மற்றும் துறையின் வரி நிர்வாகத்தை மேம்படுத்தவும் இத்திட்டத்தை வணிகவரித்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தினால் வணிகர்கள் வரிவிதிப்புவட்டங்களுக்கு நேரடியாக வரவேண்டிய அவசியம் வெகுவாக குறைகிறது.

முதல்கட்டமாக பதிவுச் சான்றிதழ் மற்றும் இதரபடிவங்கள் உருவாக்கிக் கொள்ளுதல் போன்றவசதிகள் இணையதளம் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது.

அடுத்தகட்டமாக, ஜூலை 2016 முதல் (ஜுன் மாதத்திற்கானநமூனாக்கள்) மாதாந்திர நமூனாக்களை இணையவழியில் புதிய இணையதளம் மூலம் எளிய முறையில் தாக்கல் செய்யும் வசதிஅறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையவசதிகளை பெற்றிட வணிகர்களுக்கும், அலுவலர்களுக்கும் தேவையான பயிற்சிவகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் வணிகர்களுக்கு அந்தந்த கோட்ட தலைமை அலுவலகங்கள் மூலம் பயிற்சிவகுப்புகள் தொடர்ச்சியாக நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு வணிகவரி அலுவலகங்களிலும், உதவிமையம் (Help Desk) உருவாக்கப்பட்டு வணிகர்களுக்கு இலகுவாக இவ்வசதிகளை பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இனி வருங்காலங்களில் வணிகர்கள் மாதாந்திரநமூனாக்களை (ஜூன் 2016 மாதத்திற்கானநமூனாக்கள் தொடங்கி) புதிய இணையதளம் மூலம் தாக்கல் செய்யுமாறுகேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்தவசதியினை பெறவணிகர்கள் https://ctd.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு (Signup) செய்யவேண்டியது அவசியம். பதிவு (Signup) செய்யாத வணிகர்கள் உடனடியாக பதிவுசெய்து (Signup) மாதாந்திர நமூனாக்களை புதிய இணையதளத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் வணிகர்கள் 24 மணிநேரமும் கட்டணமில்லா தொலைப்பேசி **1800 103 6751** எண்ணில் தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்கள் மற்றும் இதற்கான வழிமுறைகளை அறிந்துக் கொள்ளலாம் என கூடுதல் முதன்மைசெயலர்/வணிகவரி ஆணையர், சென்னை திரு.சி.சந்திரமௌலி, அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**